Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CMP.NO.7051/2024
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No.2 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேசன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | கண்ணாயிரம் | தொழில் | பில்டிங் ஒப்பந்ததாரர் |
| கிராமம் | குரும்பட்டி | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 07 day of January 2025.
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் பில்டிங் ஒப்பந்ததராரக வேலை செய்து வருகிறேன். மருத்துவர் வாசுதேவனுக்கு சொந்தமான நிலம் சின்ன வெங்காயப்பள்ளியில் உள்ளது. அவருடைய இடத்தில் கட்டிடம் கட்ட வேண்டும் என்று சொன்னதன் அடிப்படையில் பேசி வேலை நடந்து கொண்டிருந்தது. மார்ச் 28, 2024 அன்று சுமார் காலை 11.00 மணியளவில் JCB மற்றும் ஒரு கார் வந்தது. காரில் 10 பேர் வந்தார்கள். பொது பணி திலகம் சங்கர், சிவா, கோபி ஆகியோர் வந்தனர். மற்ற 6 பேரின் பெயர் தெரியாது. அவர்களை பார்த்தால் அடையாளம் சொல்வேன். அவர்கள் அனைவரும் கத்தி, தடி எடுத்து வந்தனர். அவர்கள் எங்களை பார்த்து வேலை செய்யாதீர்கள் என்று சொன்னார்கள். இருப்பினும் நாங்கள் வெலை செய்து கொண்டிருந்தோம். அப்போது பொது பணி திலகம் தேவிடியா பையா என்று திட்டி, இங்கு வேலை செய்தால் வெட்டி புதைத்து விடுவேன் என்று மிரட்டினார்கள். நாங்கள் பயந்து வெளியே வந்தோம். அப்போது பொது பணி திலகம் மற்றும் மருத்துவர் வாசுதேவன் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். அப்பொது பொது பணி திலகம் JCB யை பார்த்து கை அசைத்தரார். அதன்பின்னர் JCB 7 அடி மட்டம் சுவற்றை இடித்து விடடனர். அதன் மதிப்பு 1,10,000/- ஆகும். அதன்பின்னர் அங்கிருந்த M-sand . சிமேண், ஜல்லி மதிப்பு 50,000/- பொருட்களை சேதாரம் செய்துவிட்டார். அப்போது மருத்துவர் வெளியே வந்துவிட்டார். அவர் யாருக்கோ போன் செய்து பேசிவிட்டு,

என்னை ஜோலார்பேட்டை காவல் நிலையம் வரை என்ன நடந்தது என்று சொல்ல அழைத்தார். நான் சென்றேன். 08.30, 09.00 மணி வரை அங்கே காத்துக் கொண்டிருந்ததோம். ஆய்வாளர் rounds போயிருந்தார். அங்கிருந்த போலீஸ் ஒருவர் ஆய்வாளர் வர தாமதம் ஆகும் என்று எங்களை மறுநாள் வர சொன்னார். நாங்கள் மறுநாள் காலை 11.00 மணிக்கு புகார் எழுதிக்கொண்டு வாசுதேவனுடன் நானும் சென்றேன். CSR போட்டுக் கொடுத்தார்கள். FIR போடுமாறு சொன்னதற்கு ஜோலார்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் அதெல்லாம் எனக்கு தெரியும், நீ போடா என்று சொன்னார். மிரட்டி அனுப்பிவிட்டார். நாங்கள் வந்துவிட்டோம். அதனால் வழக்கு ஆய்வாளர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Signature of Witness.